மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.182/2018</u>

2025ம் ஆண்டு நவம்பர் 04ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேந்திரன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>04.11.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. தாவா சொத்து ஆரம்ப காலத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு பாத்தியப்பட்டது. எனக்கு முன்பு தாவா சொத்து என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது. அவர் பெயர் நாச்சிமுத்து கவுண்டர் என் தகப்பனார் பெயர் முத்துசாமி கவுண்டர் நாச்சிமுத்து கவுண்டர் மற்றும் அவரது சகோதரர்கள் சேர்ந்து 1934 ஆம் வருடத்தில் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் ஆமாம். அந்த பாகப்பிரிவினையில் தான் நாச்சிமுத்து கவுண்டருக்கும் காளியப்ப கவுண்டருக்கும் ஏ அட்டவணை சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. அந்த சொத்துக்கள் தான் தாவா சொத்துக்களாக இந்த வழக்கில் நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஏ அட்டவணை சொத்துக்கள் ஒதுக்கப்பட்ட காளியப்ப கவுண்டர் மற்றும் நாச்சிமுத்து கவுண்டருக்கு இந்த வழக்கின் வாதிகள் மட்டும் தான் வாரிசுகள்

என்றால் ஆமாம். 1934 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள க.ச.எண். 761 மற்றும் 766 காலைகளுக்கு வருவாய்த்துறை ஆவணங்களான பட்டா சிட்டா உள்ளிட்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆரம்ப காலத்தில் இருந்தே பட்டா உள்ளது தாக்கல் செய்துள்ளேன் மேற்படி க.ச.எண் 761 மற்றும் 766 காலைகள் தற்போது ரிசர்வேயில் 657/1 ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் மேற்படி ரீ.சர்வே எண் 657/1 வருவாய் துறையில் அரசு புறம்போக்கு என்று தான் உள்ளது என்றால் ரிசர்வையில் அது தவறுதலாக மாற்றப்பட்டுள்ளது.

3. மேற்படி காலை சம்பந்தமாக தீர்வை மாற்றம் செய்ய வேண்டும் என்று நான் வருவாய் துறையில் மனு கொடுத்து இருந்தேன் என்றால் ஆமாம் அதில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் தாவா சொத்துக்களை வந்து பார்த்து விட்டு சென்றார்கள். மேற்படி மனு கொடுத்தது சம்பந்தமாக முடிவாக ஏதேனும் உத்தரவு போடப்பட்டதா என்றால் இல்லை. நான் தாவா சொத்துக்களை பொறுத்து தீர்வை மாற்றம் செய்ய எப்போதும் மனு கொடுத்தேன் என்றால் 1998 ஆம் ஆண்டில் இருந்து மனு கொடுத்து வருகிறேன் அவ்வாறு நான் மனு கொடுத்துள்ளது சம்பந்தமாக வருவாய்த் துறையில் தான் அணுகி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அதற்காக இந்த வழக்கை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து தற்போது யாருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் என்னுடைய அனுபவத்தில் தான் இருந்து வருகிறது.

4. தாவா சொத்து எனது அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதை நிரூபணம் செய்யும் வகையில் ஆவணங்களை நான் கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். நாச்சிமுத்து கவுண்டர் மற்றும் காளியப்ப கவுண்டர் ஆகியோர்களுக்கு நாங்கள் மட்டும் தான் வாரிசுகள் என்பதை நிரூபணம் செய்யும் வகையில் ஆவணங்கள் எதையும் நான் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஒப்படைத்துள்ளேன். தாவா சொத்தை பட்டாபூமியாக மாற்ற பஞ்சாயத்தில் எதற்காக தீர்மானம் போடப்பட்டது என்றால் எங்கள் பூமி ரீசர்வையில் அரசு புறம்போக்கு விட்டதால் அதை மீண்டும் பட்டா பூமியாக மாற்றுவதற்கு யாரேனும் ஆட்சேபனை உள்ளதா என கேட்டு அந்த தீர்மானத்தை போட்டோம்.

5. அந்த தீர்மானம் என்ன ஆனது என்றால் அதை நிறைவேற்றி விட்டோம். அந்த தீர்மானத்தின் அடிப்படையில் மீண்டும் வருவாய்த் துறையை நான் மேல் நடவடிக்கைக்காக சென்று அணுகினேனா என்றால் இல்லை வருவாய் துறை ஆவணங்களில் தாவா சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்ட புறம்போக்கு நிலமாக தான் உள்ளது என்றும் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நான் அனுபவத்தில் இருந்து வருவதை அரசு தரப்பில் இடையூறு செய்ததாக சொல்லி உள்ளேன், அவ்வாறு யாரேனும் என்னை இடையூறு செய்தார்களா என்றால் இல்லை.

6. தாவா சொத்து ஆதி காலத்தில் எவ்வாறு இருந்தது என்பதை பொருத்த RSR பதிவேட்டு நகலை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்தான். தாவா சொத்தை பொறுத்து இந்த

வழக்கில் நான் கேட்டுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றும், இந்த வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.11.04 18:46:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்